2010 நவம்பர் 12]

தற்போது, எலத்தூர், தளவாய்ப்பட்டி, கோம்பை, உம்பிவித்தம்பட்டி, பொம்மியம்பட்டி, கண்டக்காப்பட்டி, சின்னேரிக்காடு மற்றும் காடையாம்பட்டி ஆகிய இடங்களில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. ஓமலூர் காடையாம்பட்டி ஒன்றியத்தில் அண்ணா நூற்றாண்டு கிராமப்புற மகளிர் பால் பண்ணைத் திட்டம் செயல்படுத்த ஆய்வு செய்தபோது, மகளிர் சுய உதவிக் குழு மற்றும் மகளிர் மேம்பாட்டுத் திட்டம் மூலமாகவும், பால் சங்கம் ஏற்படுத்த எவரும் முன்வரவில்லை. இந்நிலையில், ஓமலூர் காடையாம்பட்டி ஒன்றியத்தில், அண்ணா நூற்றாண்டு கிராமப்புற மகளிர் பால் பண்ணைத் திட்டத்தைச் செயல்படுத்த இயலாத சூழ்நிலை உள்ளது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) கத்தார் நாட்டு சிறையிலுள்ள தமிழக மீனவர்களை மீட்க நடவடிக்கை

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. ஜெயக்குமார்.

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மாதம் இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களிலிருந்து வயிற்றுப் பிழைப்பிற்காக வளைகுடா நாடுகளுக்கு மீன் பிடிக்கச் சென்ற 43 மீனவர்கள் தாயகக் கரை திரும்பவில்லை. அவர்கள் கத்தார் சிறையிலே அடைக்கப்பட்டு வாடிக்கொண்டிருக்கிற நிலைமைகளை எல்லாம் பார்த்த மாண்புமிகு அம்மா அவர்கள், "உடனடியாக தமிழக அரசு இதிலே தலையிட்டு கத்தார் சிறையில் இருக்கின்ற மீனவர்களை மீட்க வேண்டுமென்று" கண்டனம் தெரிவித்தும், இதுநாள்வரையில் அரசு

[திரு. டி. ஜெயக்குமார்] [2010 நவம்பர் 12

இதில் எந்தவித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. ** வழக்கம்போல கடிதத்தை மட்டும் அனுப்பிவிட்டு, இன்றுவரை அந்த மீனவர்களை மீட்பதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்காதது மிகவும் வருந்தத்தக்கது, வேதனைக்குரியது, கண்டனத்திற்குரியது. எனவே, இதில் அரசு மெத்தனம் காட்டாமல், காலம் தாழ்த்தாமல் அவர்களை உடனடியாக தமிழகம் கொண்டுவந்து அவர்களுடைய உறவினர்களிடத்திலே சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களின் குடும்பங்கள் இன்றைக்கு வறுமையில் வாடிக்கொண்டு, சாப்பாட்டிற்குக்கூட வழியில்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்ற நிலையில், தினந்தோறும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிவாரணங்களை வழங்குவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(ஆ) வேலூர், பாளையங்கோட்டை மத்திய சிறைகளில் செல்போன்கள், கஞ்சா பொட்டலங்கள் பறிமுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் ஆண்கள் மத்திய சிறையிலும், பெண்கள் மத்திய சிறையிலும், அதேபோல பாளையம்கோட்டையில் இருக்கக்கூடிய மத்திய சிறையிலும் நேற்றும், கடந்த வாரமும் பல செல்போன்கள் சிறைக் கைதிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டிருக்கின்றன. Sim Cards செல்போன்களினுடைய பேட்டரிகள், கஞ்சா பொட்டலங்கள் இவையெல்லாம் கைப்பற்றப்பட்ட செய்திகள் அன்றாடம் வந்துக்கொண்டிருக்கின்றன. மத்திய சிறைச்சாலைக்குள் அவ்வளவு கட்டுப்பாடுகள், விதிமுறைகளை நாம் வைத்துக்கொண்டிருக்கின்ற சூழலில் இவ்வளவு செல்போன்கள், கஞ்சா பொட்டலங்கள் எப்படி சிறைக்குள்ளே நுழைந்தன? இதனை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவந்து, மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் இதற்கு பதிலளிப்பார்களா என்பதையும், இதுவரை என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதையும் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2010 நவம்பர் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

திரு. தி. வேல்முருகன்: இதே பிரச்சினை குறித்து நானும் முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, அதற்கும் சேர்த்து பதில் சொல்வார்கள். உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஞானசேகரன் மற்றும் திரு. வேல்முருகன் ஆகியோர் முன்னறிவிப்புக் கொடுத்துள்ள இந்தப் பிரச்சினை குறித்து ஒரு விளக்கத்தைத் தருகிறேன். பொதுவாக, சிறைச்சாலைகளில் இன்று, நேற்றல்ல, வெள்ளைக்காரன் காலத்திலிருந்து கஞ்சா மற்றும் பீடி கடத்துதல் போன்றவை நடந்துக்கொண்டுதான் இருக்கின்றன. சிறைச்சாலைகளில் சட்ட, திட்டங்கள் அதிகமாக்கப்பட்டுதான் இருக்கின்றன. இருந்தாலும், சில நேரங்களில் பார்வையாளர்கள் வந்து கைதிகளைப் பார்க்கிறபோது காவலர்கள் அறியாமலேயே பொருள்களை மாற்றிவிடுகிறார்கள். இப்போது சிம் கார்டுகள், செல்போன்களையெல்லாம் பழத்திற்குள்ளேகூட வைத்து அனுப்பிவிடுகிறார்கள். அதையும் நாங்கள் கவனமாகப் பார்க்கிறோம். எவ்வளவோ கண்டுபிடிக்கப்படுகின்றன. இருந்தாலும், தொடர்ந்து நடக்கிறது என்பதை மறுத்துவிட முடியாது.

முற்பகல் 9-35

1-1-2010 முதல் 11-11-2010 வரையில் கண்டுபிடிக்கப்பட்ட செல்போன்கள் மற்றும் சிம் கார்டுகள், புழல் சிறை-23, வேலூர்-4 மற்றும் 1, கடலூர்-1, திருச்சி-1, மதுரை-10, பழனி-45, கோயம்புத்தூர்-37, சேலம்-4 என்று இப்படி செல்போன்கள் with sim card, without sim card எல்லாம் சேர்த்து 261 செல் போன்களும், Sim card-களும் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. அதேபோன்று, கஞ்சாவைப் பொறுத்தவரையிலும்கூட 93 நபர்களிடமிருந்து பிடிக்கப்பட்டிருக்கின்றன. தண்டனையாக சில சிறைத் துறைக் காவலர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. போலீஸ் வழக்குகளும் தொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுது அவற்றையெல்லாம் துல்லியமாகக் கண்டறிவதற்காக சிறைச்சாலைகளை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் செல்போன்

சத்யமேவ ஜயதே வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[திரு. துரைமுருகன்] [2010 நவம்பர் 12

கண்டறியும் கருவி மற்றும் பன்முக உலோகம் கண்டறியும் கருவிகள் ஆகியவை அனைத்து மத்திய சிறைச்சாலைகளுக்கும் வழங்கப்பட்டிருக்கின்றன. அப்படி திருட்டுத்தனமாக கொண்டுவருகின்ற வார்டன்கள்மீதும் நடவடிக்கை எடுத்து, criminal குற்றஞ்சாட்டி, போலீஸ் ஸ்டேஷனிலே ஒப்படைக்கப்பட்டிருக்கிறார்கள். சிறைவாசிகள் யார், யார் தவறு செய்தார்களோ அவர்களுக்கு சிறையிலே கொடுக்கிற சலுகைகள் மறுக்கப்படும்; Interview-ஐ எடுத்துவிடுவார்கள்; பொருள்கள் வாங்குவதற்கு அவர்கள் Deposit வைத்திருப்பார்கள். அதிலிருந்து பொருள்கள் வாங்க முடியாது; இப்படி பல கட்டுப்பாடுகளை விதித்திருக்கிறோம். இருந்தாலும் இன்னும் பல கட்டுப்பாடுகளை விதிப்பதற்கு அரசு பல்வேறு திட்டங்களை ஆய்ந்துகொண்டிருக்கிறது.

(அ) கத்தார் நாட்டு சிறையிலுள்ள தமிழக மீனவர்களை மீட்க நடவடிக்கை—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ். (குறுக்கீடு) பொறுங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயக்குமார் அவர்கள் கத்தார் நாட்டிலே சிறைபிடிக்கப்பட்டிருக்கின்ற மீனவர்களைப் பற்றி சொன்ன தகவல் தொடர்பாக ஒரு சிறிய தகவலை இந்த அவைக்குத் தர வேண்டுமென்று எண்ணுகிறேன். 10 தினங்களுக்கு முன்பு நம்முடைய வெளியுறவுத் துறை அமைச்சரை சந்திக்கின்ற வாய்ப்பு கிடைத்தபோது, இந்தப் பிரச்சினையைப் பற்றி நாங்களும் அவரிடம் எடுத்துரைத்தோம். அவர் உடனடியாக வெளியுறவுத் துறை எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சிகளைப் பற்றிச் சொன்னார். கத்தார் நாட்டிலே தற்பொழுது அந்த நாட்டினுடைய அரசியல் அமைப்பு மாற்றப்பட்டு, அந்தப் பாராளுமன்றம் ஒரு புதிய சட்டத்தை நிறைவேற்றி இருக்கிறது. அந்தச் சட்டத்தின்படி அவர்களுடைய கடல் எல்லைக்குள் மீன்பிடிக்க வருகின்றவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்காக அந்தச் சட்டம் சமீபத்திலே திருத்தப்பட்டிருப்பதாகவும், அந்தச் சட்ட விதிகள் மாற்றப்பட்டால்தான் அவர்களை விடமுடியும் என்றும் பதில் தெரிவித்திருக்கிறார். அந்தப் பாராளுமன்றத்திலே அந்தச் சட்ட விதிகளையே மாற்ற வேண்டுமென்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எழுதிய கடிதத்தையும் அது தொடர்பாக நம்முடைய வெளியுறவுத் துறை செயலாளர் எழுதிய கடிதத்தையும்கூட நாங்கள்

2010 நவம்பர் 12] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

பார்க்கக்கூடிய வாய்ப்பு கிடைத்தது. எனவே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஜெயக்குமார் அவர்கள் சொன்னதுபோல மாநில அரசோ, மத்திய அரசோ இதைப்பற்றி கண்டுகொள்ளாமல் இல்லை. கடல் கடந்த நாடுகளில் இருக்கின்ற சட்டங்களைத் திருத்திக்கூட தமிழர்களை மீட்டு வர வேண்டும் என்பதிலே நம்முடைய முதலமைச்சர் அவர்களும் (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய மத்திய அரசும் உறுதியாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) நாகப்பட்டினம் மாவட்டம், பிள்ளைப்பெருமாநல்லூர் மின் நிலைய விரிவாக்க கருத்துக் கேட்புக் கூட்டத்தில் வன்முறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை மாவட்டம், பொறையாறு அருகில் உள்ள பிள்ளைபெருமாநல்லூர் என்னும் கிராமத்தில் தனியார் அனல் மின் நிலைய விரிவாக்கத்திற்கான கருத்துக் கேட்புக் கூட்டத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், மாசுக் கட்டுப்பாடு வாரியமும் நடத்தியபொழுது அப்பகுதியில் வாழ்கின்ற மீனவ மக்களும், மீனவர் அமைப்புகளும், அப்பகுதியில் வாழ்கின்ற பொதுமக்களும் தங்களுக்குப் பாதிப்பு ஏற்படும் என்கிற கருத்தினை மாசுக் கட்டுப்பாடு வாரிய அலுவலரிடத்திலும், மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலும் முறையிடச் சென்றிருக்கிறார்கள். அந்த நேரத்தில் ஏற்கெனவே திட்டமிட்டு அந்த தனியார் மின் நிலையத்தின் சார்பில் சில rowdy கும்பல்களும், வன்முறையாளர்களும் அப்பாவிப் பொதுமக்கள்மீது சரமாரியாக உருட்டுக்கட்டைகளாலும், கம்பிகளாலும் தாக்கியதில் சில பேர் மண்டை உடைக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

ஏற்கெனவே இது போன்று ஒரு அனல் மின் நிலையத்தை கடலூர் மாவட்டத்தில் ஏற்படுத்த முயற்சித்தபோது மாவட்ட ஆட்சித் தலைவர் நடத்திய கருத்துக் கேட்புக் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவரை பொதுமக்கள் தாக்க முயற்சித்தார்கள் என்று 300 பேர்மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்துவது அரசு. அரசு அழைக்கின்ற கூட்டதை நம்பிச் செல்கின்ற பொதுமக்கள் இதுபோன்று தனியார் அனல் மின் நிலையத்திற்கு ஆதரவான வன்முறைக் கும்பல்களால்

[திரு. தி. வேல்முருகன்] [2010 நவம்பர் 12

தாக்குதலுக்கு உள்ளாக்கப்படுவது, வழக்குகள் பதிவு செய்யப்படுவது என்பது ஜனநாயக நாட்டில் ஏற்புடையதல்ல. அந்தக் கூட்டத்தில் உள்ளே புகுந்து rowdyism-த்தில் ஈடுபட்டவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதையும் இந்த நேரத்திலே அறிய விரும்புவதோடு, இதுபோன்ற பிரச்சினைகள் இனி தமிழகத்தில் நடைபெறாதவண்ணம் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, அப்பகுதி மக்களுக்கு ஏற்படுகின்ற அச்சுறுத்தல்களை, பிரச்சினைகளை எடுத்துச் சொல்கின்றபோது அவர்கள்மீது வழக்குப் பதிவு செய்கின்ற நிலையையும் அரசு கைவிட வேண்டும் என்கிற மிக முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பிரச்சினைமீது பேரவைத் தலைவர் வாயிலாக அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இருக்கிறார்களா என்று பார்த்து அந்த அமைச்சருடைய Subject தானா என்று பார்த்த பின்புதான் கூப்பிட முடியும். உட்காருங்கள்.*

முற்பகல் 9-40

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய மின் நிலையங்களை அமைக்கும்போது சுற்றுச்சூழல் certificate வாங்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதற்காக கருத்துக் கேட்புக் கூட்டங்கள் நடைபெறுகின்றன. அதிலே வேண்டுமென்றே, திட்டமிட்டு, சில சமுதாய விரோதிகள் அந்தப் பகுதிகளிலே அந்த மின் நிலையங்கள் வரக்கூடாது என்பதற்காக இப்படிப்பட்ட கலவரங்களிலே ஈடுபடுகிறார்கள். அதேநேரத்தில் அங்கே நிலச் சொந்தக்காரர்கள் எப்படியும் இந்த மின் நிலையம் வரவேண்டும், இந்தப் பகுதியிலே வேலைவாய்ப்பில்லா பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும், இந்தப் பகுதி முன்னேற வேண்டும், பொருளாதாரரீதியாக முன்னேற வேண்டும் என்று நினைக்கின்றவர்கள் எல்லாம், அவர்களோடு மோதிக்கொள்கிறார்கள். இப்படி நிலச் சொந்தக்காரர்கள், திட்டங்கள் வரவேண்டுமென்று நினைப்பவர்கள் ஒரு பக்கத்திலே; இன்னொரு பக்கத்திலே இதற்கு எதிர்ப்பாக இருக்கக்கூடியவர்கள், இவர்களுக்கு மத்தியில் நடைபெறுகின்ற இந்தத் தகராறில் காவல் துறை சட்டப்படி யார்மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமோ, அவர்கள்மீது உரிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது. (குறுக்கீடுகள்)

2010 நவம்பர் 12]

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனுமதியில்லை. பதில் சொல்லியாகிவிட்டது என்றால் முடிந்தது. (குறுக்கீடு) No clarification, உட்காருங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம், நீங்கள் ஏதாவது கேட்கவேண்டுமென்றால் கேளுங்கள். (குறுக்கீடு) திரு. வேல்முருகன், உட்காருங்கள். பிரச்சினை பண்ணாதீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். சொல்லியாகிவிட்டதல்லவா? வாய்ப்புக் கொடுத்த பிறகும் இப்படி இடைஞ்சல் செய்தீர்கள் என்றால் எப்படி?

(அ) கத்தார் நாட்டு சிறையிலுள்ள தமிழக மீனவர்களை மீட்க நடவடிக்கை—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஓ. பன்னீர்செல்வம், என்னவோ கேட்கப் போகிறேன் என்று சொன்னீர்களே! (குறுக்கீடு) இல்லை, இல்லை, ஒன்று சொல்கிறேன் கேளுங்கள்; சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் இருந்தால் மட்டும் கேளுங்கள், சும்மா vagueஆகக் கேட்பதில் பயனில்லை. (குறுக்கீடு) நீங்கள் ஒன்றும் கேட்கவில்லையா? (குறுக்கீடு)

திரு. ஓ. பன்னீர்செல்வம்: சம்பந்தப்பட்ட அமைச்சர் இருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஓ. பன்னீர்செல்வம், சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: நம்முடைய கன்னியாகுமரி மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த மீனவர்கள் கத்தார் சிறையிலே வாடிக் கொண்டிருக்கிற தகவலை இங்கே சொல்லி, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு சிறிய வேண்டுகோள். நீங்கள் சொல்வதற்குப் பதில் அளிக்க வேண்டுமென்றால் மாண்புமிகு முதலமைச்சர் இருக்க வேண்டும்; மாண்புமிகு முதலமைச்சர் இங்கு இல்லை.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் இருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் நீங்கள் இதற்குப் பதில் சொல்கிறீர்களா? (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொல்கிறபோது, கடல் எல்லையைத் தாண்டி யார் மீன் பிடிக்கச் சென்றாலும், அவர்களைத் தண்டிக்க அங்கே கடுமையான சட்டம் இருக்கின்றது என்ற கருத்து தொனிக்கின்ற வகையில் இங்கே சொன்னார்கள். ஆனால் அந்த மீனவர்கள் இங்கிருந்து படகுகளைக் கொண்டு சென்று, அங்கே மீன் பிடித்தவர்கள் அல்லர். கத்தார் நாட்டிற்குச் சொந்தமான படகுகளில் பணியாற்ற இங்கிருந்து கூலிக்குச் சென்றவர்கள், வேலைக்குச் சென்றவர்கள், அவர்கள்தான் அங்கே சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தப் படகுக்குச் சொந்தக்காரர் விடுவிக்கப்பட்டு விட்டார். ஆனால், இங்கிருந்து கூலி வேலைக்குச் சென்றவர்கள் சிறையில் வாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்பதுதான் எங்களுடைய கோரிக்கை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தின் கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி போன்ற மாவட்டங்களிலிருந்து சவுதி அரேபியாவிற்கு மீன் பிடிப்பதற்காகச் சென்ற மீனவர்கள் நாற்பது நாட்களுக்கு முன்பாக சவுதி அரேபியாவிலிருந்து மீன் பிடிக்கச் செல்லும்போது, கத்தார் நாட்டுக் கடல் எல்லையைத் தாண்டியதாக கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அதனையொட்டி நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் ஐயா கலைஞர் அவர்கள், மத்திய அரசினுடைய வெளியுறவுத் துறை அமைச்சர் மற்றும் வெளியுறவுத் துறைச் செயலாளர் அவர்களிடத்திலே தமிழக அரசின் சார்பாக அந்த மீனவர்களை மீட்பதற்கான அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறார்கள். தொடர்ந்து இதுபோன்ற நிகழ்வுகள் நடைபெறுகின்ற நேரத்தில் நம்முடைய முதல்வர் ஐயா கலைஞர் அவர்கள், பாரதப் பிரதமர்மூலம் அம்மீனவர்களை மீட்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயக்குமார் அவர்கள் 'வழக்கமாக, வழக்கமாக' என்று இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்; இங்கே அண்ணன் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல, 'வழக்கம்போல' அவர்களை

2010 நவம்பர் 12] [திரு. கே.பி.பி. சாமி]

மீட்பதற்கான அனைத்து முயற்சிகளையும் அரசு தீவிரமாக மத்திய அரசின்மூலமாகவும் மேற்கொண்டுள்ளது. நம்முடைய தமிழகத்திலிருந்து இலங்கை கடல் எல்லையிலே மீன் பிடிக்கப் போகும்போது அவர்களை மீட்பது பெரிய பிரச்சினை; அது இரு நாட்டுப் பிரச்சினை. இதுவோ மூன்று நாடுகள் சம்பந்தப்பட்ட பிரச்சினையாகிறது. இந்திய மீனவர்கள் சவுதி அரேபியாவிற்கு மீன் பிடிக்கச் சென்றிருக்கிறார்கள். சவுதி அரேபியாவிலிருந்து கத்தார் நாட்டுக் கடல் எல்லையைத் தாண்டுகிறபோது அவர்கள் அங்கே கத்தார் நாட்டுக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றன. இதற்கான முயற்சிகளை வழக்கம்போல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்து வந்து கொண்டிருக்கிறார்கள். மீனவர்களையும் வழக்கம்போல் மீட்டுக்கொண்டிருப்பவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள். ** என்பதனை நான் இந்த மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகின்றேன். (குறுக்கீடுகள்)

முற்பகல் 9-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரச்சினை எங்கே இருந்து வருகிறது? (குறுக்கீடுகள்) உங்கள் உறுப்பினர் குற்றச்சாட்டாகச் சொல்லப் போகத்தான், அமைச்சர் அதற்கு பதில் சொல்லியிருக்கிறார். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார் அவர்கள் பேசும்பொழுது, வேண்டுமென்றே நம்முடைய முதலமைச்சர் அவர்கள்மீது குற்றம் சுமத்துகின்ற வகையில் ** என்று சொல்லிய அந்த வார்த்தைகளை அவர் வாபஸ் பெற்றால், மாண்புமிகு அமைச்சர் பேசிய அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பேட்டிலிருந்து எடுக்கலாம். (குறுக்கீடுகள்)

(ஈ) அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் பயிற்சிக் கல்லூரிகளில் பயின்ற செவிலியர்களுக்கு அரசுப் பணியிடம் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2010 நவம்பர் 12

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய அங்கீகாரம் பெற்ற செவிலியர் பயிற்சிக் கல்லூரியில் படித்த மாணவிகளுக்கு கடந்த காலத்தில் நீதிமன்றத்தில் வழக்கு நடந்ததன் காரணமாக அரசுப் பணி வழங்க முடியாத ஒரு சூழ்நிலை இருந்தது. ஆனால், சமீபத்தில் நீதிமன்றத்தினுடைய வழிகாட்டுதல் கிடைக்கப்பெற்றதன் காரணமாக, அரசினுடைய அங்கீகாரம் பெற்ற தனியார் செவிலியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி முடித்த மாணவிகளை அரசு மருத்துவமனைகளில் செவிலியராகப் பணி நியமனம் செய்வதற்கு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும், அவருடைய துறையும் முடிவு செய்து, அவர்களுக்கு உதவி செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியது சம்பந்தமாக அரசினுடைய நடவடிக்கையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) கத்தார் நாட்டு சிறையிலுள்ள தமிழக மீனவர்களை மீட்க நடவடிக்கை—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.ஏ. செங்கோட்டையன், உங்கள் உறுப்பினர் மாண்புமிகு முதல்வர்மீது குற்றச்சாட்டு சொன்னார்கள். அதற்குப் பதிலாக கடந்த காலத்தில், உங்கள் ஆட்சிக் காலத்தில் உங்களுடைய முதல்வர் செய்ததை அவர் சொன்னார். இதிலே என்ன இருக்கிறது? *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் கேட்பதைப் பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. எதிர்க்கட்சியிலே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள், யாராவது ஒருவர் முன் வரிசையிலே உட்கார்ந்திருக்கிறவர்கள் எழுந்து கேட்கலாம். 'வழக்கமாக', எல்லோரும் வழக்கமாக, எழுந்து எழுந்து நிற்கிறார்களே! இது என்ன வழக்கம் என்று கேட்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

2010 நவம்பர் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார், மாண்புமிகு முதல்வர்மீது கூறிய குற்றச்சாட்டும் அதேபோன்று மாண்புமிகு அமைச்சர் முன்னாள் முதல்வர்மீது கூறிய குற்றச்சாட்டும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

(உ) சிமெண்ட், கம்பி உள்ளிட்ட கட்டுமானப் பொருட்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த நடவடிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கட்டுமானப் பொருள்களுடைய விலை மிகப் பெருமளவில் உயர்ந்திருக்கிறது. குறிப்பாக சிமெண்ட் விலை எட்டிப்பிடிக்க முடியாத நிலைக்கு உயர்ந்திருக்கிற காரணத்தினாலும், கம்பி, ஜல்லி போன்ற பொருட்களுடைய விலை உயர்ந்திருக்கிற காரணத்தினாலும் கட்டுமானப் பணிகளில் மிகப் பெரிய தேக்க நிலை தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிறது. அண்டை மாநிலங்களிலேகூட விலை குறைந்திருக்கிறது. அதனால் இங்கே குறைப்பதற்குரிய முயற்சியை அரசு எடுத்திருக்கிறதா? (குறுக்கீடுகள்) சிமெண்ட், கம்பி, ஜல்லி விலை உயர்வின் காரணமாக கட்டுமானப் பணிகள் மிகப் பெரிய தேக்க நிலைக்கு ஆட்பட்டிருக்கிறது. சிமெண்ட் விலை உயர்வைக் குறைப்பதற்கான முயற்சி எடுக்கிற வகையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொழில் நிறுவன அதிபர்களோடு பேச்சுவார்த்தை நடத்தியதற்குப் பின்னாலும் விலை குறைக்கப்படவில்லையே! அண்டை மாநிலத்திலே விலை குறைந்திருக்கிறது, தமிழகத்தில் விலை குறைக்கப்படவில்லையே! இதற்காக அரசு என்ன முயற்சியை மேற்கொண்டிருக்கிறது என்பதை இந்த அவைக்குத் தெளிவுபடுத்துமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 9-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் நடந்த விவாதத்திலேயும்,